## பொருளாதார வளர்ச்சி

### பொதுப்படையான செயலாற்றம்

நடைமுறைக்காரணி உற்பத்தி விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி 1976ம் ஆண்டில் ரூ.240,818 இலட்சத்தில் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, 1975ஆம் ஆண்டின் தொடர்பான மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 9.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். விலை அதிகரிப்புக்களுக்கு இடம் விட்டு, 1975இன் 3.6 சதவீதத்துடன் ஒப்புநோக்குகையில் மொத்தத் தேசிய உற்பத்தி, 1976ஆம் ஆண்டில் நிலையான (1959) விலைகளின்படி 3.0 சதவீதத்தால் அதிகரித்தது.

1976ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இலங்கைக் குடித்தொகையின் தற்காலிக மதிப்பீடு 137 இலட்சமாக அமைந்து, 1 6 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. நிலையான (1959) விலைகளின்படி தனி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1975ஆம் ஆண்டின் 2.0 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் 1.3 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. உண்மை நியதிகளின்படி தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1975இன் ரூ. 822 உடன் நோக்குகையில் 1976ல் ரூ. 833 ஆக அமைந்தது. கடந்த பத்து ஆண்டுகளின் நிலையான விலைகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தியையும், தனி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தியையும் அவற்றின் ஆண்டு வளர்ச்சி வீதங்களையும் அட்டவணை 1 தருகின்றது.

இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிநாட்டு வர்த்தகத்தின் முக்கியத்துவத்தினால் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் உண்மைத் தேசிய வருமானத்தில் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைகின்றன. வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்படும் முன்னேற்றம் இறக்குமதிகளின் அளவை அதிகரிக்கச் செய்கின்றது. கொடுக்கப்படும் ஏற்றுமதிகளின் அளவிற்குச் சமமான இறக்குமதி அளவைப் பெறுவதினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களினதும் பணிகளினதும் செலாவணிப் பெறுமதி அதிகரிக்கின்றது. உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தி, வர்த்தக மாற்று விகிதங்களில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பச் சீராக்கம் செய்யப்படுமிடத்து உண்மைத் தேசிய வருமானத்தின் மதிப்பீடுகளைத் தருகின்றது.

1976ம் ஆண்டு வர்த்தகமாற்று விகிதம் 35 சதவீதத்தால் அதிகரித்தமையால் உண்மைத் தேசிய வருமானம் 4.0 சதவீதத்தால் அதிகரித்தது. அதே வேளை, உண்மைத் தேசிய உற்பத்தி 3 0 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. தனி ஆளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 1.3 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்த போதும் தனி ஆளுக்கான உண்மை வருமானம் 2.4 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 1

## நிலையான (1959) விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியும் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தியும் — அவற்றின் வளர்ச்சி வீதங்களும் 1967-1976

| ஆண்டு | மொத்தத் தேசிய உற்பத்தி | | தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி | |
|---|---|---|---|---|
| | ரூ.பத்து லட்சத்தில் | வளர்ச்சிவீதம் | ரூ. | வளர்ச்சிவீதம் |
| 1967 | 8,210 | 5.0 | 702 | 2.8 |
| 1968 | 8,901 | 8.4 | 742 | 5.7 |
| 1969 | 9,301 | 4.5 | 759 | 2.3 |
| 1970 | 9,686 | 4.1 | 774 | 2.0 |
| 1971 | 9,725 | 0.4 | 766 | – 1.0 |
| 1972 | 10,039 | 3.2 | 770 | 1.2 |
| 1973 | 10,419 | 3.8 | 784 | 2.7 |
| 1974 | 10,730 | 3.0 | 807 | 1.4 |
| 1975 | 11,115 | 3.6 | 822 | 1.9 |
| 1976 | 11,443 | 3.0 | 833 | 1.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1974–1976ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

வேறு சொற்களில் விளம்பின் 1976ஆம் ஆண்டு வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட திருத்தத்தினால் உண்மைத் தேசிய உற்பத்தியிலும் பார்க்க உண்மைத் தேசிய வருமானம் கூடிய முறையில் அதிகரித்தது. உண்மைத் தேசிய வருமான அதிகரிப்புக்கள், உற்பத்தி, பன்னாட்டுச் செலாவணி ஆகியன மூலம் கிடைக்கக்கூடிய உண்மை வளங்களை அதிகரிக்கும் கருவியாக அமைகின்றன. 1976இல் ஏற்பட்ட திருத்தம், 1975ஆம் ஆண்டு வர்த்தக மாற்று விகிதத்தில் 20.6 சதவீத வீழ்ச்சி ஏற்பட்ட நிலைக்கு முரணாக அமைந்துள்ளது. அவ்வாண்டில் உண்மைத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள 3.6 சதவீத அதிகரிப்பு உண்மைத் தேசிய வருமான அதிகரிப்பில் 1 7 சதவீதமாக் மட்டுமே குறைக்கப்பட்டது.

### மொத்தத் தேசிய உற்பத்திச் செயலாற்றத்தின் பகுப்பாய்வு

நிலையான (1959) காரணி உற்பத்தி விலைகளின்படி இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான உள்ளடக்கம் அட்டவணை 2இல் தரப்பட்டுள்ளது இவ் அட்டவணை ஒவ்வோர் ஆண்டுப் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளினது தொடர்பான முக்கியத்துவத்தையும், 1972ஆம் ஆண்டுவரை ஒவ்வோர் துறையின் வளர்ச்சியையும், 1959ஆம் அடிப்படை ஆண்டுடன் ஒப்பிட்டுத் தருகின்றது

உண்மை நியதிகளின்படி மொத்தத் தேசிய உற்பத்தி 1975ஆம் ஆண்டின் 3.6 சதவீதத்துடனும், 1974ஆம் ஆண்டின் 3.0 சதவீதத்துடனும் ஒப்பு நோக்குகையில் 1976இல் 3.0 சதவீதத்தால் அதிகரித்தது. 1976ம் ஆண்டில் ஏற்பட்ட மெதுவான வளர்ச்சி வீதத்திற்கு வேளாண்மைத்துறை உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். இவ்வேளாண்மைத்துறை உற்பத்தி வீழ்ச்சிக்கு முக்கியமாக தேயிலை, தெங்கு போன்ற பெருந்தோட்டப் பயிர்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக அமைந்தது. இவற்றினது உற்பத்தி வீழ்ச்சியினை நெல், றப்பர், துணை உணவுப்பயிர்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்புக்களினாலும் கூட ஈடுசெய்ய முடியவில்லை.

### அட்டவணை 2

## நிலையான (1959) காரணி உற்பத்தி விலைகளில், துறைவகைப்படியான மொத்தத் தேசிய உற்பத்தியின் உள்ளடக்கம்

தொகை – பத்து இலட்சம் ரூபாய்களில்

| துறைகள் | 1959 | | 1972 | | 1973 | | 1974 | | 1975 | | 1976 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், வேட்டையாடலும், கடற்றொழிலும் | 2,302 | 39.1 | 3,476 | 34.6 | 3,420 | 32.8 | 3,558 | 33.1 | 3,602 | 32.4 | 3,568 | 31.2 |
| 2. சுரங்கத் தொழிலும் பார்க்குழித் தொழிலும் ... | 31 | 0.5 | 68 | 0.7 | 266 | 2.5 | 191 | 1.8 | 248 | 2.2 | 354 | 3.1 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 682 | 11.6 | 1,400 | 14.0 | 1,421 | 13.6 | 1,359 | 12.6 | 1,462 | 13.2 | 1,489 | 13.0 |
| 4. கட்டடவாக்கம் (கட்டுமானம்) ... | 283 | 4.8 | 505 | 5.0 | 516 | 5.0 | 553 | 5.1 | 503 | 4.5 | 531 | 4.6 |
| 5. மின்சாரம், வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 10 | 0.2 | 31 | 0.3 | 31 | 0.3 | 32 | 0.3 | 33 | 0.3 | 36 | 0.3 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தலும், செய்தித் தொடர்பும் ... | 541 | 9.2 | 988 | 9.8 | 1,019 | 9.8 | 1,054 | 9.8 | 1,100 | 9.9 | 1,143 | 10.0 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 801 | 13.6 | 1,327 | 13.2 | 1,383 | 13.3 | 1,450 | 13.5 | 1,501 | 13.5 | 1,545 | 13.5 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 51 | 0.9 | 136 | 1.4 | 142 | 1.4 | 165 | 1.5 | 184 | 1.7 | 191 | 1.7 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 201 | 3.4 | 313 | 3.1 | 318 | 3.1 | 344 | 3.2 | 350 | 3.1 | 353 | 3.1 |
| 10. பொதுநிருவாகமும், பாதுகாப்பும் ... | 301 | 5.1 | 522 | 5.2 | 567 | 5.4 | 609 | 5.7 | 646 | 5.8 | 676 | 5.9 |
| 11. பணிகள் ... | 728 | 12.3 | 1,334 | 13.3 | 1,379 | 13.2 | 1,441 | 13.4 | 1,513 | 13.6 | 1,593 | 13.9 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 5,930 | — | 10,098 | — | 10,462 | — | 10,755 | — | 11,142 | — | 11,480 | — |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் | – 37 | – 0.6 | – 60 | – 0.6 | – 44 | – 0.4 | – 24.9 | – 0.20 | – 26.9 | – 0.2 | – 36.9 | – 0.3 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி .. | 5,893 | 100.0 | 10,038 | 100.0 | 10,419 | 100.0 | 10,731 | 100.0 | 11,115 | 100.0 | 11,443 | 100.0 |

1974–1976 ஆண்டுகளுக்கான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் துறையின் உற்பத்தி 1975ஆம் ஆண்டின் 1.2சதவீத அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில், 0.9 சத வீதத்தால் குறைவுற்றது. முக்கிய ஏற்றுமதிப் பண்டமான தேயிலையின் உற்பத்தி 8.1 சதவீதத்தால் குறைவுற்றிருக்க தெங்கு 'உற்பத்தி 12.8 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. மறுபுறம், றப்பர் உற்பத்தி 2 2 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1976ஆம் ஆண்டில் மொத்த நெல் உற்பத்தி 600இலட்சம் புசல்களில், 1975ஆம் ஆண்டிலும் பார்க்க 8.5 சதவீதம் அதி கமாக அமைந்தது. சோளம், மெனெறி, தட்டைப்பயறு, வெங்காயம் போன்ற துணை உணவுப் பயிர்களின் உற்பத்தி சென்ற ஆண்டின் 12.0 சதவீத அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் 1976இல் 3.8 சதவீதத்தால் அதிகரித்தது. சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 20.0 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.

சுரங்க, பார்க்குழித்தொழில் துறை உற்பத்தி, 1975இன் 30சதவீத அதி கரிப்புடன் ஒப்புநோக்குகையில் 1976இல் 42.7 சதவீதத்தால் அதிகரித்தது. இத்துறை வளர்ச்சியில் ஏற்பட்ட அதிகரித்த வீதத்திற்கு அருங்கற்கள் தோண்டு வதில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். இதன் உற்பத்திப் பெறுமதி 1975இல் ரூ. 1880இலட்சத்திலிருந்து 1976இல் ரூ. 2870 இலட்சத்திற்கு அதிகரித்தது. காரீயம், உப்பு உற்பத்தியிலும் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப் பட்டன. 1974இல் ஏற்பட்ட பின்னடைவினைத் தவிர சென்ற சில ஆண்டுகளில் சுரங்க, பார்க்குழித் தொழில் கூடியளவு தொழிற்பாட்டைக் காட்டியுள்ளது.

தயாரிப்புத் தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியானது (தேயிலை, இறப்பர் தெங்கு பதனிடல், நெல் குத்துதல், அப்பமனை உற்பத்திகள் உட்பட) எல்லை யளவில் 1.9 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பு நோக்குமிடத்து 1975ஆம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 7.5 சதவீதமாகும். தேயிலை, இறப்பர், தெங்கு பதனிடலின் கூட்டப்பட்ட பெறுமதியினை ஒன்ருக எடுத்து நோக்கின் 6 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்தது. ஒப்புநோக்கின், 1975இல் 7.5சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. இவ்வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், தயாரிப்புத் துறை தொழிற்சாலை, குடிசைக் கைத்தொழில்கள் என்பவற்றின் வெளியீடுகளில் ஏற் பட்ட அதிகரிப்பின் காரணமாக 1.9 சதவீத வளர்ச்சி வீதத்தைக் காட்டு கின்றது. தொழிற்சாலை கைத்தொழில்களின் கூட்டப்பட்ட அதிகரிப்பு 4.8சத வீதமாகும். ஒப்புநோக்குமிடத்து 1975இல் ஏற்பட்ட அதிகரிப்பு 8.0 சதவீத மாகும். குடிசைக்கைத்தொழில்களின் வெளியீடு 1976ம் ஆண்டில் 8.1 சதவீதத் தால் அதிகரித்ததுடன், இது, 1975ம் ஆண்டின் 3.3 சதவீத அதிகரிப்பிலும் பார்க்க உயர்வீத அதிகரிப்பாகக் காணப்படுகிறது. குடிசைக் கைத்தொழில் களின் வெளியீட்டில் ஏற்பட்ட அதிகரிப்பு புடவை உற்பத்தியில் காணப் படுகிறது.

இவ்வாண்டில் கட்டுமானத் தொழிற்பாடுகள் அரசினதும் கூட்டுத்தாபனத் துறைகளிலும் பெரிதும் செறிந்து காணப்படுகின்றது. 1975ஆம் ஆண்டில் ஏற்பட்ட 8.9 சதவீத வீழ்ச்சிக்கு மாருக 1976ஆம் ஆண்டில் கட்டுமானத் துறையில் கூட்டப்பட்ட பெறுமதி 5.5 சதவீதத்தால் அதிகரித்தது. 1976ம் ஆண்டில் கட்டடப்பொருட்கள் கிடைப்பில் முன்னேற்றம் காணப்பட்டாலும் சீமெந்தின் குறைந்த வழங்கலும், கிடைக்குந்தன்மையும் கட்டடப் பொருட் களின் உயர்ந்த விலைகளும் கட்டுமானங்களின் விரைவான விரிவாக்கத்திற்குத் தடைகளாக அமைந்தன. இத்தலையாய பொருளின் உற்பத்தி முன்னைய

ஆண்டில் 20.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்னர் 1976இல் 7.7சத வீதத்தால் மட்டும் அதிகரித்தது. மேலும், இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் போக்குவரத்துச் சிக்கல்களின் காரணமாக சீமெந்தின் வழங்கல் பின்னடைந்தது.

பணிகள் துறையின் வெளியீடு 1975ஆம் ஆண்டில் 4.6 சதவீதத்தால் அதி கரித்திருக்க பெருந்தோட்டத்துறைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 3.9 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. நிதியிடற் பணிகளின் வெளியீடு 1.4 சதவீதத்தால்மட்டும் அதிகரித்தது. பொதுநிருவாகம் பாதுகாப்பு என்பனவற்றின் வெளியீடு 4.7 சதவீதத்தால் அதிகரித்தது.

கடந்த சில ஆண்டுகளில் சுற்றுலாக் கைத்தொழிலில் விரைவானவிரிவாக்கம் ஒன்றைக் காணக் கூடியதாக இருந்தது. இந்நிலை, 1976இல் தொடர்ந்திருந்தது. 1975ஆம் ஆண்டின் வருவாயான ரூ. 1240 இலட்சத்துடன் ஒப்புநோக்குகையில் 1976ம் ஆண்டில் கிடைத்த ரூ. 1980 இலட்சம் கொண்ட தொகை, இக்கைத் தொழிலிலிருந்து கிடைத்த வெளிநாட்டுச் செலாவணி உழைப்புக்கள் 5வது ஆண்டிலும் தொடர்ந்து அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப் பானது சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் அவர்களின் சராசரிச் செல வினத்தின் அதிகரிப்பு ஆகிய இரண்டின் காரணமாக ஏற்பட்டதொன்றாகும்.

**மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

அட்டவணை III இலிருந்து சென்றவாண்டின் ரூ.2,96,940 இலட்சத்துடன் ஒப்பு நோக்குமிடத்து 1976ம் ஆண்டின் பொருளாதாரத்திற்கு கிடைக்கக்

**அட்டவணை 3**

**மூலவளங்களின் உள்ளடக்கமும் பயன்பாடும்**

| | 1975 | | 1976 | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் சதவீதம் | 1975 | 1976 |
| (அ) மொத்த மூலவளங்கள் ... | 2,9694 | 100.0 | 32,119 | 100.0 | 12.5 | 8.2 |
| 1. பொ. உ. உ. (சந்தை விலைகள்) ... | 24,063 | 81.0 | 26,375 | 82.1 | 11.5 | 9.6 |
| 2. பொருட்களதும், காரணிகளல்லாத பணிகளதும் இறக்குமதிகள் ... | 5,631 | 19.0 | 5,744 | 17.9 | 17.2 | 2.0 |
| (ஆ) பயன்பாடு ... | 29,694 | 100.0 | 32,119 | 100.0 | 12.5 | 8.2 |
| 1. நுகர்வு ... | 21,358 | 71.9 | 22,608 | 70.4 | 9.7 | 5.9 |
| 2. மொத்த உள்நாட்டு மூலதன அமைப்பு ... | 3,908 | 13.2 | 4,194 | 13.1 | 24.3 | 7.3 |
| இவற்றில் | | | | | | |
| (அ) அரசு .. | 1,307 | 4.4 | 1,496 | 4.7 | 49.9 | 14.5 |
| (ஆ) பொதுக் கூட்டுத்தாபனங்கள் .. | 466 | 1.6 | 492 | 1.5 | 21.4 | 5.6 |
| (இ) தனியார் துறை ... | 2,135 | 7.2 | 2,206 | 6.9 | 13.3 | 3.3 |
| 3. பொருட்களதும் காரணிகளல்லாத பணிகளதும் ஏற்றுமதி ... | 4,428 | 14.9 | 5,317 | 16.5 | 17 0 | 20.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கூடியதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 3,21,190 இலட்சம் என்பது தெளிவாகிறது. 1976ஆம் ஆண்டில் கிடைக்கக் கூடியதாக இருந்த மேலதிக மூலவளங்களில் 95.3 சதவீதம் உள்நாட்டு உற்பத்தியிலிருந்தும், 4.7 சதவீதம் இறக்குமதியிலிருந்தும் கிடைத்தன. மொத்த மூலவளங்களில் இறக்குமதிகளின் அளவு இறக்குமதி விலைகளின் வீழ்ச்சியினாலும் உள்நாட்டு விலைகளில் ஏற்பட்ட தொரு அதிகரிப்பினாலும் 1975ஆம் ஆண்டின் 19.0 சதவீதத்திலிருந்து 1976ஆம் ஆண்டில் 17.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. மொத்த மூலவளங்களின் ரூ. 41,940 இலட்சம் அல்லது 13.1 சதவீதம் உள்நாட்டு மூலதன ஆக்கத் திற்குப் பயன்படுத்தப்பட்டது. உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் ஏறக்குறைய அரைப்பங்கு அரச, பொதுக்கூட்டுத்தாபனத்துறையிலிருந்து கிடைத்தது.

1976ம் ஆண்டில் அரச, பொதுக்கூட்டுத்தாபனங்களின் மூலதனவாக்கம் 12.1 சதவீதத்தால் அதிகரிக்க தனியார் துறையில் ஏற்பட்ட அதிகரிப்பு 3.3 சதவீதமாகும் 1976ம் ஆண்டில் பொருளாதாரத்தில், ஏற்பட்ட மூலதன வாக்கத்தின் முழுமையான அதிகரிப்பு 7.3 சதவீதமாகும்.

முதலீட்டிற்கு நிதியிடுவதில் வெளிநாட்டு மூலவளங்களினதும் உள்நாட்டுச் சேமிப்புக்களினதும் இணைந்த முக்கியத்துவம் அட்டவணை 4இல் கொடுக்கப் பட்டுள்ளது. 1974ஆம் ஆண்டுக்குப்பின்னர் மொத்த உள்நாட்டு உற்பத்திக் கான உள்நாட்டுச் சேமிப்பின் வீதம் 1974இன் 9.7 சதவீதத்திலிருந்து 1975இல் 11.2 சதவீதத்திற்கும் 1976இல் 14.3 சதவீதத்திற்கும் அதிகரித் துள்ளமையை இவ்வட்டவணை காட்டுகிறது.

### வேளாண்மை உற்பத்தி

1976ம்ஆண்டின் வேளாண்மை உற்பத்தியின்போக்கு அண்மைய ஆண்டுகளின் போக்குகளுடன் அமையவே ஆராயப்படுகிறது, நான்கு முதன்மைப் பயிர் களான தேயிலை, இறப்பர், தெங்கு, நெல் ஆகியவற்றின் இறுதிப் பத்தாண்டு காலத்திற்கான செயற்பாடுகளின் முக்கிய குறிகாட்டிகள் அட்டவணை 5 இல் தரப்பட்டுள்ளன.

### தேயிலை உற்பத்தி

1975ஆம் ஆண்டில் 4710 இலட்சம் இறாத்தல்களாக இருந்த தேயிலை உற்பத்தி, 1976ஆம் ஆண்டில் 4330 இலட்சம் இறாத்தல்களாகக் குறைந்து 8.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1975ஆம் ஆண்டின் உற்பத்தியின் வீழ்ச்சி 210 இலட்சம் இறாத்தல்களாக அதிகரித்ததற்கு மாறாக 1976ம் ஆண்டின் உற்பத்தி 380 இலட்சம் இறாத்தல்களுக்கு வீழ்ந்தது. 1959ம் ஆண்டிற்குப்பின்னர் 1976ம் ஆண்டின் உற்பத்தியின் அளவே ஆகக் குறைவான தாகும். கடந்த பத்து ஆண்டுகளில் தேயிலை உற்பத்தி 1967ல் 4870 இலட்சம் இறாத்தல்களாகவிருந்தது. 1968ல் 4960 இலட்சம் இறாத்தல்களாக சிறிதளவு அதிகரிப்பைக் காட்டிய பின்பும் உற்பத்தி 4840 இலட்ச இறாத்தல்களுக்கும், 4330 இலட்சம் இறாத்தல்களுக்குமிடையில் தளம்பலுற்றது. அத்துடன் 1965 இன் 5030 இலட்சம் இறாத்தல்கள்கொண்ட உச்ச மட்டத்திலும் பார்க்க மிகக் கீழ் நிலையில் இருந்தது.

## அட்டவணை 4

## நுகர்வும், முதலீடும், உள்நாட்டுச் சேமிப்புகளும் 1970 - 1976

(தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | 1970 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1971 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1972 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1973 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1974 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1975 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் | 1976 | மொ. உ. உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை-விலைகளில் ... | 12,782 | 100 | 12.708 | 100 | 13,634 | 100 | 16,741 | 100 | 21,581 | 100 | 24,063 | 100 | 26,375 | 100 |
| 2. வெளிநாட்டு மூலவளங்கள் பொருட்களும் காரணியற்ற பணிகளும் ... | 278 | 2.2 | 180 | 1.4 | 180 | 1.3 | 135 | 0.8 | 1,040 | 4.8 | 1,203 | 5.0 | 427 | 1.6 |
| 3. நுகர்வு ... | 10,505 | 82.2 | 10,639 | 83.8 | 11,697 | 85.8 | 14,246 | 85.1 | 19,471 | 90.2 | 21,358 | 88.8 | 22,608 | 85.7 |
| பொது .. | 1,649 | 12.9 | 1,790 | 14.1 | 1,924 | 14.1 | 2,043 | 12.2 | 2,771 | 12.8 | 2,508 | 10.4 | 3,050 | 11.6 |
| தனியார் ... | 8 856 | 69.3 | 8,849 | 69.7 | 9,773 | 71.7 | 12,203 | 72.9 | 16,700 | 27.4 | 18,850 | 78.4 | 19,558 | 74.1 |
| 4. முதலீடு ... | 2,555 | 20.0 | 2,249 | 17.6 | 2,118 | 15.5 | 2,629 | 15.7 | 3,139 | 14.6 | 3,909 | 16.2 | 4,193 | 15.9 |
| பொது ... | 785 | 6.1 | 588 | 4.6 | 342 | 2.5 | 677 | 4.0 | 871 | 4.1 | 1,307 | 5.4 | 1,496 | 5.7 |
| தனியார் ... | 1,770 | 13.9 | 1,661 | 13.0 | 1,776 | 13.0 | 1,952 | 11.7 | 2,268 | 10.5 | 2,602 | 10.8 | 2,697 | 10.2 |
| 5. மீதி (தனியார்துறை இருப்புக்களையும் உள்ளடக்கி) .. | 30.4 | 0.2 | 1,364 | 1.1 | 154.0 | 1.1 | 185.8 | 1.1 | 151.3 | 0.7 | 184.7 | 0.8 | 161.8 | 0.6 |
| 6. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (அதாவது (4) – (2)) ... | 2,277 | 17.8 | 2,069 | 16.3 | 1,938 | 14.2 | 2,494 | 14.9 | 2,099 | 9.7 | 2,706 | 11.2 | 3,766 | 14.3 |

1974 - 1976 வரையுமான மதிப்பீடுகள் தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 5

## முக்கிய வேளாண்மைப் பயிர்களின் முதன்மைக் குறிகாட்டிகள் 1967 – 1976

| | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976(அ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **உற்பத்தி** | | | | | | | | | | |
| தேயிலை (பத்து இலட்சம் இருத்தல்கள்) ... | 487 | 496 | 484 | 468 | 480 | 471 | 466 | 450 | 471 | 433 |
| இறப்பர்(பத்து இலட்சம் இருத்தல்கள்)... | 316 | 328 | 333 | 351 | 312 | 309 | 341 | 291 | 328 | 335 |
| தெங்கு (பத்து இலட்சம் காய்கள்) ... | 2,416 | 2,601 | 2,440 | 2,510 | 2,610 | 2,963 | 1,935 | 2,031 | 2,398 | 2,093 |
| நெல் (பத்து இலட்சம் புசல்கள்) ... | 55.1 | 64.6 | 65.9 | 77.4 | 66.9 | 62.9 | 62.9 | 76.8 | 55.3 | 60.0 |
| **ஏக்கர் பரப்பு** | | | | | | | | | | |
| தேயிலை – மொத்தம் ... | 598,814 | 597,490 | 596,514 | 597,499 | 597,171 | 597,645 | 598.740 | 598.466 | 597,691 | 594,527 |
| ஆண்டுதோறும் மீளப்பயிரிடப்பட்டவை ... | 5,269 | 5,266 | 6,500 | 6,857 | 6,640 | 6,418 | 5,953 | 4,282 | 4,356 | 2,758 |
| ஒன்றுசேர்ந்து மீளப்பயிரிடப்பட்டவை ... | 21,662 | 26,928 | 33,428 | 40,285 | 46,925 | 53,343 | 59,296 | 63,578 | 67,934 | 70,692 |
| றப்பர் – மொத்தம் ... | 569,121 | 569,207 | 568,633 | 568,900 | 567,994 | 567,060 | 565,000 | 563,406 | 562,494 | 560,000 |
| பால் சேகரிப்பிற்குட்பட்ட பரப்பு ... | 487,702 | 488,121 | 493,712 | 496,210 | 494,355 | 491,324 | 475,529 | 475,165 | 477,110 | 474,626 |
| ஆண்டுதோறும் மீளப்பயிரிடப்பட்டவை ... | 10,076 | 13,047 | 12,084 | 10.214 | 8,476 | 8,722 | 4,964 | 7,076 | 7,980 | 6,298 |
| ஒன்றுசேர்ந்து மீளப்பயிரிடப்பட்டவை ... | 250,995 | 264,042 | 276,126 | 286,340 | 294,816 | 303,538 | 308,502 | 315,578 | 323,558 | 329,856 |
| தெங்கு – மொத்தம் (1962) ... | (1,152,418) | | | | | | | | | |
| நெல் – மொத்தம் (1000 ஏக்கர்கள்) ... | 1,639 | 1,742 | 1,709 | 1,876 | 1,794 | 1,795 | 1,792 | 2,038 | 1,719 | 1,789 |
| அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (1000) | 1.567 | 1,634 | 1,539 | 1,776 | 1,714 | 1,579 | 1,660 | 1,969 | 1,476 | 1,570 |
| கூடிய விளைவுதரும் இனங்கள் .. | வி.கி. | 1,083 | 1,108 | 1,325 | 1,204 | 1,252 | 1,284 | 1,647 | 1,285 | 1,381 |
| **ஏக்கருக்குரிய விளைவு** | | | | | | | | | | |
| தேயிலை ... | 813.3 | 830.1 | 811.4 | 811.0 | 833.0 | 816.0 | 805.0 | 882.0 | 920.0 | 846.0 |
| இறப்பர் ... | 647.3 | 671.7 | 673.5 | 707.2 | 657.0 | 658.0 | 694.0 | 634.0 | 691.1 | 705.0 |
| தெங்கு ... | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. | வி.கி. |
| நெல் ... | 41.27 | 46.49 | 50.33 | 51.30 | 45.91 | 46.87 | 44.58 | 45.65 | 44.04 | 44.91 |

(அ) தற்காலிகமானவை.

மூலங்கள் பற்றிய குறிப்பு—

தேயிலை, றப்பர் புள்ளிவிபரங்கள் தொடர்பான கட்டுப்பாட்டாளர்களிடமிருந்து பெறப்பட்டவை. தெங்கு உற்பத்தியின் மதிப்பீடு மத்திய வங்கியின் மதிப்பீடாக அமைய பயிரிடப்பட்ட ஏக்கர்களின் புள்ளிவிபரங்கள் 1962 ம் ஆண்டு வேளாண்மைப் புள்ளிவிபரங்களிலிருந்து பெறப்பட்டவையாகும். நெற் புள்ளிவிபரங்கள் குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்றனவாகும்.

தாழ் நில உற்பத்தி, மத்திய நில உற்பத்தி, உயர் நில உற்பத்தி என மூன்று முக்கிய நில உயர அடிப்படையில் நாட்டின் தேயிலை உற்பத்தியை அட்டவணை 6 காட்டுகின்றது. இந்தப் பகுப்பாய்வு, 1976 ஆண்டின் தேயிலை உற்பத்தியில் எல்லா வகைத் தேயிலைகளும் வீழ்ச்சியடைந்ததைப் புலப்படுத்துகிறது. எனினும், மத்திய நிலத் தேயிலைவகை 191 இலட்சம் இருத்தல்களால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 6

உயர அடிப்படையில் தேயிலை உற்பத்தி வகைகள் — 1970-76

பத்து இலட்சம் இருத்தல்கள்

| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|---|
| உயர் நில உற்பத்தி ... | 178.8 | 186.4 | 179.4 | 177.6 | 177.0 | 176.7 | 167.3 |
| மத்திய நில உற்பத்தி ... | 159.2 | 167.5 | 165.1 | 155.2 | 155.4 | 161.1 | 142.0 |
| தாழ் நில உற்பத்தி ... | 129.8 | 126.2 | 126.0 | 132.8 | 117.3 | 133.2 | 123.9 |
| மொத்தம் | 467.8 | 480.1 | 470.5 | 465.6 | 449.7 | 471.0 | 433.2 |

மூலம்: தேயிலை ஆணையாளர் திணைக்களம்.

1976ஆம் ஆண்டின் தேயிலைப் பயிர் உற்பத்தியில் வானிலைக் காரணிகளும், குறிப்பிட்ட சில உள்ளீடுகளின் பயன்பாடும் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தன, கடந்த பத்து ஆண்டுகளுக்கான மழை வீழ்ச்சியில், 1976ம் ஆண்டில் கண்டி மாவட்டமும், நுவரெலியா மாவட்டமும் ஆகக்குறைந்தளவு ஆண்டு மழை வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. வளமாக்கிகளின் பயன்பாடும், 1975இல் 1,06,517 தொன்களிலிருந்து 1976ல் 9,76,37 தொன்களுக்கு வீழ்ந்தது.

1971ம் ஆண்டு வரை அதிகரித்த போக்கைக் காட்டிவந்த மீள்நடுகைப் பரப்பளவு அதன்பின்பு வீழ்ச்சியடைந்துவரும் போக்கைக்காட்டுகின்றது. 1976ம் ஆண்டில் 2758 ஏக்கர்கள் மட்டுமே மீள்நடுகை செய்யப்பட்டதுடன் இது 1975ம் ஆண்டில் மீள்நடுகை செய்யப்பட்ட 4356 ஏக்கர்களிலும் பார்க்க 36.7 சதவீதத்தால் குறைவடைந்தும் காணப்பட்டது. 1976ம் ஆண்டின் தேயிலை நிலப்பரப்பில் 12 சதவீதம் அல்லது 7,07,00 ஏக்கர்கள் மீள்நடுகை செய்யப்பட்டிருந்தது.

**இறப்பர்**

இறப்பர் உற்பத்தி 1975ம் ஆண்டில் 3280 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1976ம் ஆண்டில் 3350 இலட்சம் இருத்தல்களுக்கு உயர்ந்தது. 1975ம் ஆண்டின் 370 இலட்சம் இருத்தல் அதிகரிப்பினைத் தொடர்ந்து இந்த 70 இலட்சம் இருத்தல்கள் அல்லது 2.1 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. தட்டை இறப்பர் உற்பத்தி சிறிதளவில் வீழ்ச்சியடைந்து காணப்பட்ட வேளையில் கிறேப் றப்பர் உற்பத்தி அதிகரித்தது. ஏக்கருக்கான சராசரி விளைவு 705 இருத்தல்களாகும்.

இறப்பர் உற்பத்தி 1967இல் இருந்து 1970 வரை அதிகரிப்பையும், 1971, 1972ம் ஆண்டுகளில் ஓரளவுவீழ்ச்சியையும்,1973இல் பெருமளவான அதிகரிப்பை யும் அதைத் தொடர்ந்து 1974இல் 500 இலட்சம்கொண்ட பெரியதொரு வீழ்ச்சி யையும் காட்டுகிறது. 1975, 1976ஆம் ஆண்டுகளின் அதிகரிப்பானது உயர்ந்த போக்கின் அடையாளமாக இருப்பதுடன், இதற்கு முன்னர் மீள் நடுகை செய்யப்பட்ட நிலப்பரப்புகளின் வெளியீடு அதிகரிப்பினுலும் 1975ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து அதிகரித்த விலைகளுக்கு கைத்தொழில்கள் சார்பாக அமைந் ததும் காரணமாக இருக்கலாம்.

1976ம் ஆண்டில் மீள்நடுகை செய்யப்பட்டதும், புதிதாக பயிர் செய்கையின் கீழ்கொண்டு வரப்பட்டதுமான நிலப்பரப்புக்களின் அளவு 1975ம் ஆண்டைவிடக் குறைவானதாகும். மீள்நடுகைசெய்யப்பட்ட நிலப்பரப்பு 7980 ஏக்கர்களிலிருந்து 6298 ஏக்கர்களுக்கு வீழ்ந்தது. இதனுல் மீள்நடுகைத் திட்டத்தின் கீழ் கொடுக் கப்பட்ட பணத்தின் தொகையும் ரூ 120 இலட்சங்களிலிருந்து ரூ. 111 இலட் சங்களாக வீழ்ந்தது. இறப்பர் மீள்நடுகை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 3,29,856 ஏக்கர்களாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதுடன் இது, இறப்பர் செய்கையின் கீழ் உள்ள பரப்பினளவில் 60 சதவீதத்தையும் எடுத்துக்காட்டு கின்றது. 1975ஆம் ஆண்டில் புதிதாக பயிர் செய்கைக்கு உட்படுத்தப்பட்ட 352 ஏக்கர்களுடன் ஒப்பிடுமிடத்து, இவ்வாண்டில் 139 ஏக்கர்மட்டுமே புதிதாகப் பயிர்செய்கைக்கு உட்படுத்தப்பட்டது. முன்னர் மீள்நடுகை செய்யப்பட்டதன் காரணமாக இப்போக்குகள் குறுகிய காலத்தில் உற்பத்தி அதிகரிக்கும் எனக் காட்டிய போதும் நீண்ட காலத்தில் உற்பத்தி போதியளவு அதிகரிக்கவில்லை.

### தெங்கு

இலங்கை மத்திய வங்கியினுல் மேற்கொள்ளப்பட்ட தற்காலிக மதிப் பீட்டின்படி தேங்காய் உற்பத்தி 1975இல் 23,980 இலட்சம் காய்களிலிருந்து 1976ல் 20,930 இலட்சம் காய்களாக 12.7 சதவீதத்தால் வீழ்ந்தது. தொடர்ச்சி யான வரட்சி நிலைமைகளும், 1975ல் வளமாக்கிகளை மிகக் குறைந்தளவு பயன் படுத்தியமையால் காலம்தாழ்ந்து விளைவு ஏற்பட்டமையுமே உற்பத்தியில் இவ் வீழ்ச்சி ஏற்படக் காரணமாகும். 1970ல் 60,000 தொன்களாக இருந்த வளமாக்கிகளின் பயன்பாடு 1974; 1975ல் முறையே 39,311 தொன்களாகவும், 24,463 தொன்களாகவும் வீழ்ச்சியடைந்தது.

ஆண்டு தோறும் மீள்நடுகை செய்யப்பட்ட பரப்பளவு 1972ஆம் ஆண்டில் 18,800 ஏக்கர்களிலிருந்து 1973இலும் 1974இலும் ஏறக்குறைய 14,200 ஏக்கர் களுக்கு வீழ்ந்தது. 1975ல் மீண்டும் அதிகரித்து 17,400 ஏக்கர்களை அடைந்தது. ஆயினும், இது, 1976இல் 13 100 ஏக்கர்களுக்கு வீழ்ச்சியுற்றது.

1972 வரையில் அதிகரித்த போக்கினைக்காட்டி, மிக உயர்ந்த மட்டமான 29,630 இலட்சம் காய்களை அடைந்தவேளையிலும், கடந்த பத்து ஆண்டுகளாக தேங்காய் உற்பத்தி ஆண்டுதோறும் தளம்பலுற்றே வந்துள்ளமையைக் காட்டு கிறது. 1973ல் உற்பத்தி பெருமளவாக 19,350 இலட்சம் காய்களால் வீழ்ச்சி யடைந்தது. ஆயினும், 1974இல் ஏறத்தாழ 1000 இலட்சம் காய்களாலும் 1975இல் 3670 இலட்சம் காய்களால் அல்லது 18 சதவீதத்தாலும் அதிகரித் தது. 1975ம் ஆண்டில் உற்பத்தியில் போதியளவு அதிகரிப்பு ஏற்பட்டதற்கு சீரான வானிலை நிலைமைகளே முக்கிய காரணங்களாகும்.

உற்பத்தியின் வீழ்ச்சி இரண்டு தாக்கங்களைக்கொண்டிருந்தது. வீட்டு நுகர்வில் முக்கிய கூருக நேரடியாக தேங்காயாகவும் மறைமுகமாக எண்ணெயாகவும் சமையலிற்கு பயன்படுத்தப்பட்டமையால் தேங்காயின் விலை உயர்வு உள்நாட்டில் வாழ்க்கைச் செலவை உயர்த்துகிறது. பன்னுட்டு அடிப்படையில், வெளிநாட்டு செலாவணி உழைப்புகளைக் குறைத்த போதிலும் இத் தாக்கத்தினை விலை அதிகரிப்புக்கள் ஓரளவு எதிரீடு செய்யலாம். இவ்வாருன காரணங்களால் முதலீடுகள் ஏற்ற வேளாண்மை வழிமுறைகள் ஆகியவற்றின் மூலம் தெங்குக் கைத்தொழில் பழைய நிலையை அடைவதனை உறுதிப்படுத்துவது தேவையானதாகும். நீண்ட காலத்தில் உற்பத்தி மட்டத்தை பேணுவதற்கு பயிர்களுக்கிடையில் பயிர் இடலும், புதிய பயிர்களை நடலும் ஏற்கனவே உள்ள தென்னைப் பரப்பளவை விரிவாக்குவதும், உயர்ந்த விளைவு தரும் பயிர்களின் பயிரிடலை மேற்கொள்வதும் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**நெல் உற்பத்தி**

*1975ஆம் ஆண்டிலும் பார்க்க 1976ஆம் ஆண்டில் (1975 / 1976ஆம் ஆண்டு பெரும் போகம், 1976ஆம் ஆண்டு சிறுபோகமும்) நெல் உற்பத்தி 50 இலட்சம் புசல்களால் அல்லது 8.5 சதவீதத்தால் அதிகரித்தது. இது, 1975/1976 பெரும்போகத்தில் உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பான 78 இலட்சம் புசல்களினுல் ஏற்பட்டதாகும். இவ்வதிகரிப்பு 1976ம் ஆண்டில் சிறு போகத்தின் உற்பத்தி 31 இலட்சம் புசல்களால் வீழ்ச்சியுற்றதனுல் ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது. 1976ம் ஆண்டின் உற்பத்தியான 600 இலட்சம் புசல்கள், பெரும் போகத்தின் 423 இலட்சம் புசல்களையும் சிறுபோகத்தின் 178 இலட்சம் புசல்களையும் உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டு வேளாண்மையின் சராசரி ஏக்கருக்கான உற்பத்தி 44.9 புசல்களாகும். இது, முன்னைய ஆண்டை விட 2 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும்.*

*கடந்த சில ஆண்டுகளாக நெல் உற்பத்தி தளம்பலுற்றுக் காணப்படுவதற்கு வானிலைநிலைமைகளே முக்கிய பொறுப்புடையனவாக இருக்கின்றன. மொத்த நெல் உற்பத்தி 1970இலிருந்து 1973வரை வீழ்ச்சியடைந்தது. எனினும், 1974இல் உற்பத்தி குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து ஆண்டின் இரண்டாவது உயர்மட்டமான 768 இலட்சம் புசல்களை அடைந்தது. இது 1975இல் 553 இலட்சம் புசல்களுக்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்ததுடன், இது, மீளாய்விற்குரிய ஆண்டில் மீண்டும் அதிகரித்தது.*

*அறுவடை செய்யப்பட்ட பரப்பளவும் விளைச்சலும் அதிகரித்ததன் காரணமாக 1975/76ம் ஆண்டிற்கான பெரும்போகத்தின் உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டது. பெரும் போகத்தில், விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு 10.9 இலட்சம் ஏக்கர்களிலிருந்து 11.5 இலட்சமாக அதிகரித்த வேளையில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 9 இலட்சங்களிலிருந்து 10.5 இலட்சமாக அதிகரித்தது.*

*பெரும்போகத்தில் ஏக்கருக்கான சராசரி விளைவு 1 புசலால் 46.2 புசல்களினின்று 47.2 புசல்களாக அதிகரித்தது. திருந்திய வகைகள் கொண்ட பரப்பளவு 13.6 சதவீதமாக விரிவடைந்த வேளையில், முன்னைய பெரும் போகத்தைக்காட்டிலும் வளமாக்கியின் பயன்பாடு மிகக்கூடியளவில் 58.6 சதவீதங்களால் அல்லது 15,593 தொன்களால் அதிகரித்தது. இவ்விரண்டும் விளைவு அதிகரிப்பிற்கான காரணிகளாகக் கணக்கில் கொள்ளப்படவேண்டும்.*

Central Bank of Sri Lanka
22651
10 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communication Department



வளமாக்கிகளுக்கான உதவுதொகை 50 சதவீதத்துக்கு உயர்த்தப்பட்டமையின் காரணமாக வளமாக்கிகளின் விலைகள் குறைந்ததை அடுத்து வளமாக்கிகளின் வழங்கலில் மிகப் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறுபோகத்தில் அறுவடைசெய்யப்பட்ட மொத்தப்பரப்பு 82,145 ஏக்கர்கள் அல்லது 13.68 சதவீதத்தால் குறைவடைந்தமை சிறுபோகத்தின் உற்பத்தியில் வானிலையின் சாதகமற்ற தன்மையினைக் குறிக்கிறது. எதிர்காலத்தில் மகாவலி திசை திருப்பத்தால் சிறுபோகத்தில் பயிரிடப்படும் பரப்பளவு அதிகரிப்பதுடன் நீர்ப்பற்றுக் குறையினால் ஏற்படும் பயிர் இழப்பும் குறையும். நாட்டின் பொருளாதாரத்தில் இது முக்கியமானதாகையால் இத்திட்டத்தின் விளைவு வேறாக ஆராயப்படுகிறது.

1976ம் ஆண்டுக்கான சிறுபோகத்தின் ஒரு ஏக்கருக்கான சராசரி விளைச்சல் சிறிதளவில் முன்னைய சிறுபோகத்தின் 40.8 புசல்களிலிருந்து 40.3 புசல்களுக்கு வீழ்ச்சியடைந்தது 1975/76ம் ஆண்டிற்கான பெரும்போகத்திலும் பார்க்க சிறுபோகத்தில் வளமாக்கிகளின் வழங்கல் பெரும்ளவில் அதிகரித்தது. இது முன்னைய சிறு போகத்திலும் பார்க்க 87.1 சதவீதம் உயர்ந்ததாகும். 1976 சிறுபோகத்தில் வேளாண்மை செய்யப்பட்ட பரப்பளவு குறைவடைந்த போதும் வளமாக்களின் பயன்பாட்டின் மொத்த அளவு 30,836 தொன்களில் 1976சிறுபோகத்தின்போது பயன்படுத்தப்பட்ட அளவினைக்கொண்டதாக இருந்த போதும், 1973ம் ஆண்டின் சிறுபோகத்தின் போது பயன்படுத்தப்பட்ட மிக உயர்மட்டமான 40,736 தொன்களைவிடக் குறைவானதாகும். இது வளமாக்கியின் விலைக்குறைப்பை வேளாண்மையாளர்கள் தமக்கு சார்பாக பயன்படுத்தி கொண்டமையைக் குறிக்கின்றது.

1975/76ம் ஆண்டில் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் நெற்சந்தைப் படுத்தற்சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் அளவு 15 இலட்சம் புசல்களால் அல்லது 13 3 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டின் 20.5 சதவீதத்துடன் ஒப்பீடுகையில் 1975/76ஆம் ஆண்டின் உற்பத்தியில் 21.4 சதவீதம் கொள்வனவு செய்யப்பட்டது. 1975 ஒற்றோபரில் நெல் கொண்டு செல்வதில் இருந்த கட்டுப்பாடுகளும், நெற் கொள்வனவில் நெற் சந்தைப் படுத்தற்சபை கொண்டிருந்த தனியுரிமையும் நீக்கப்பட்டபின்பும், கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் மொத்த அளவு, மொத்த உற்பத்தியில் கொள்வனவு செய்யப்பட்ட விகிதம், ஆகிய இரண்டும் அதிகரித்துள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

**துணை உணவுப்பயிர்களும் பால் உற்பத்தியும்**

அண்மைய ஆண்டுகளில் துணை உணவுப் பயிர்ச் செய்கைக்கு உட்பட்ட பரப்பளவும், உற்பத்தியின் அளவும் அதிகரித்துள்ள போக்கைக் காட்டியுள்ளன. கிடைக்கப்பெற்ற புள்ளிவிபரங்களின்படி 18 துணை உணவுப்பயிர்கள் பயிரிடப்பட்ட பரப்பளவு 1974/75ல் 6,58,702 ஏக்கர்களிலிருந்து 1975/76இல் 7,41,720 ஏக்கர்களுக்கு அதிகரித்தது. துணை உணவுப்பயிர்களின் வெளியீடு 4.1 சதவீதத்தால் அதிகரித்தது.

குடிமதிப்புப் புள்ளிவிபரத்திணைக்கள மதிப்பீட்டின்படி பால் உற்பத்தியின் 1975ம் ஆண்டின் 2719இலட்சம் போத்தல் பாலுடன் ஒப்பிடுகையில் 1976இல்

குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து 3300 இலட்சம் போத்தல்களாக விளங்கியது. 1975ம் ஆண்டின் 77,370,000 பைந்து பாலுடன் ஒப்பிடுகையில் தேசிய பாற்சபையின் 1976ம் ஆண்டின் பால் சேகரிப்பு 35.4 சதவீதத்தால் அதிகரித்து 1,04,766,000 பைந்துகள் கொண்ட என்றுமில்லா மட்டத்தை அடைந்தது. பாதகமான வானிலை நிலைமைகள் இருந்தபோதும் இந்த முன்னேற்றம் ஏற்பட்டது.

**மகாவலி அபிவிருத்தித் திட்டம்**

இலங்கையின் பொருளாதாரத்தில், மகாவலி ஆறு உலர்வலயத்திற்குத் திசை திருப்பப்பட்டது குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சியாகும். மகாவலி அபிவிருத்தித் திட்டம் முற்றுப்பெறும்பொழுது ஏனைய நன்மைகளுடன் 6,54,000 ஏக்கர்கள் கொண்ட புதியநிலங்களும், ஏற்கனவே பயிர்ச்செய்கைக்குட்பட்ட 2,46,000 ஏக்கர்களும் நீர்ப்பாசன வசதியை நிலையாக பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1970இல் தொடங்கப்பட்ட இத்திட்டம் இருபத்தைந்து ஆண்டுகளில் முற்றுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொல்கொல்லை, போவத்தன்னை திட்டங்களின் பெரும் வேலைகள் எலகார அணை, கால்வாய், சுடுகங்கை அபிவிருத்தி ஆகியன 1976ம் ஆண்டு முடிவில் முற்றுப்பெற்றதுடன் மகாவலி திசை திருப்பத்தால் பல குளங்கள் குறிப்பாக, அநுராதபுரம், பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள குளங்கள் நீரைப் பெறக் கூடியதாக இருந்தன. குளநீர்ப்பாசனத்தின்கீழ் இருந்த 1,34,000 ஏக்கர் நெல்நிலங்களில் இருபோகம் பயிர் செய்யக்கூடியதாக இருப்பது இத்திசை திருப்பத்தால் உருவான ஒரு வாய்ப்பாகும். ஆயினும், 1976ஆம் ஆண்டு சிறுபோகத்தில் இப்பரப்பின் பெரும் பகுதியில் பயிர் செய்ய முடியவில்லை. இதற்கு 1976ம் ஆண்டின் முன்னரைப்பகுதியில் மகாவலி கங்கை நீர் பெறும் பகுதியில் குறைவான மழைவீழ்ச்சியும் 1975, 1976ம் ஆண்டுகளில் நிலவிய கடுமையான வரட்சியின் பின் பல குளங்களில் நிலவிய வரண்ட தன்மையால் நீரின் பெருமளவு விகிதம் குளங்களின் நிலப்பரப்பால் உறிஞ்சப் பட்டதுமே முக்கிய காரணங்களாகும்.

மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் முழு அளவின் முதலாவது செயல் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில் தொடங்கப்பட்ட நில அபிவிருத்தியில் கலாவெவப்பகுதியின் 71,000 ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1976இல் காடழிக்கப்பட்டு நீர்ப் பாசனத்தை முழுமையாகப் பெற்ற பரப்பளவும், புதிதாக கலாவெவப் பகுதியில் தொடங்கப்பட்ட நிலப்பரப்புக்களின் தொகையும் 20,000 ஏக்கர் களாகும். இந்த நிலப்பரப்பில் 55 சதவீதமானவை நெற்செய்கைக்கான நீர்ப் பாசனத்தைப் பெற்ற வேளையில் மிகுதியான நிலப்பகுதி மேட்டு நிலப் பயிர்ச்செய்கைக்கு ஒதுக்கப்பட்டது. கலாவெவப்பகுதியில் 1976/1977ம் பெரும் போக காலப்பகுதியில் வடகிழக்கு பருவக்காற்றின் தாமதத்தாலும்மகாவலி குறைந்தளவு நீரை வெளியேற்றியமையாலும் வேளாண்மைச்செய்கையாளர் களால் அவர்களது பெரும்போகப் பயிர்ச் செய்கையை உரிய காலத்தில் மேற் கொள்ள இயலாமல் போனதுடன் ஏறத்தாழ 3000 ஏக்கர் நெல்லும் 2000 ஏக்கர் மேட்டு நிலப்பயிர்களுமே பயிர்செய்யப்பட்டன. 1976ம் ஆண்டு காலப் பகுதியில் சிறப்பு செயல்திட்ட அபிவிருத்திப் பரப்பின் கட்டம் 11 ல் ஏறத் தாழ 3000 வேளாண்மையாளர்கள் குடியமர்த்தப்பட்டனர்.

1976ம் ஆண்டின் முடிவில் இத்திட்டத்தின்மீதான ஒன்றிணைந்த செலவு ரூ. 5570 இலட்சங்களாகும். இதில் ரூ. 1210 இலட்சம் 1976ம் ஆண்டில் செலவு செய்யப்பட்டது.

**கைத்தொழில் உற்பத்திகள்**

அரசினதும் தனியார்துறையினதும் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப் பெறுமதி 1975ஆம் ஆண்டின் ரூ. 55,560 இலட்சத்திலிருந்து 1976இல் ரூ. 60,610 இலட்சங்களால் அல்லது 9 சதவீதத்தினுல் அதிகரித்தது கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி 6 சதவீத வளர்ச்சியினைக் காட்டுகிறது எனினும், உண்மை நியதிகளின்படி கைத்தொழில் உற்பத்தியும், கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியும் முறையே 1.2 சதவீதத்தாலும் 4.0 சதவீதத்தாலும் அதிகரித்தது. உற்பத்தியின் அதிகரிப்பு பெரிதும் அரசதுறைக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களிலேயே ஏற்பட்டது.

உற்பத்தியில் வளர்ச்சியினைக் காட்டி 5 சதவீதத்தினுல் கைத்தொழில்துறையின் தொழில் நிலை அதிகரித்தவேளையில் பயன்பாட்டளவும் ஓர் அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது. இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் அதிகரித்த நிலையில் கிடைக்கக்கூடியதாக இருந்தமையால் உற்பத்தியினை உயர்மட்டத்தில் செய்யக்கூடியதாகவிருந்தது. இடைநிலைப்பண்டங்களின் இறக்குமதிகளின் அளவு, இறக்குமதி அளவுக்குறிகாட்டியினுல் அளவிட்டுள்ளபடி (1967=100) 1975இன் 56இலிருந்து 1976இல் 68 ஆக உயர்வடைந்தது.

கைத்தொழில் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு, உடன் தயாரிப்பு உடைகள், பெற்றோலிய உற்பத்திகள், மட்பாண்டங்கள், தகரத்தில் அடைக்கப்பட்ட பழங்கள் என்பனவற்றிலேயே பதிவுசெய்யப்பட்டுள்ளது. 1975இல் கைத்தொழில் உற்பத்தியின் மொத்தப்பெறுமதியில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 9 சதவீதத்திற்கு மட்டும் வகைகூறியிருக்க, 1976இல் 12 சதவீத வளர்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

1976இல் பின்வரும் விரிவாக்க வகுப்புகளில் கைத்தொழில் உற்பத்தி விரிவடைந்துள்ளது. முக்கியத்துவத்தின் அடிப்படையில் பின்வருமாறு அமைந்துள்ளன – உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியம், கரி தவிர) உருவாக்கப்பட்ட உலோகத் தயாரிப்பு உற்பத்திகள், இயந்திரமும் போக்குவரத்துக் கருவிகளும், உணவு தயாரிப்புக்கள், குடிபானம், புகையிலை இரசாயனத் தயாரிப்புக்கள், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் என்பனவாகும்.

கைத்தொழில் வகுப்பில், உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் கரியும் நீங்கலாக) என்பனவற்றின் வளர்ச்சி வீதம் உயர்வானதாக இருந்தது. மட்பாண்டம், சீமெந்து, செங்கற்கள், ஓடுகள் என்பனவற்றின் உயர்வான உற்பத்தி மட்டங்கள் இத்துறை உற்பத்தியின் வருமானத்திற்கும் காரணமாக இருந்தன. கைத்தொழில் தொகுதியில் இவ்வகைக் கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருளின் உள்ளடக்கம், ஆகக்குறைந்தவற்றில் ஒன்ருகும். அத்துடன், இத்தொகுதியினுல் தொழிலில் அமர்த்தப்பட்ட ஊழியர் தொகை உயர்வான

தாகவும் வளர்ச்சி வீதத்தில் கூட்டப்பட்ட பெறுமதியான 45 சதவீதமானது 1976 இல் பதிவுசெய்யப்பட்டவற்றில ஆகக் கூடியதாகும்.

கைத்தொழில் உற்பத்தி தொடர்ந்தும் நுகர்வு, இடைநிலைப்பொருட்களையே பெருமளவு உள்ளடக்கி இருந்ததுடன் மொத்தப் பெறுமதியில் ஏறக்குறைய 90 சதவீதத்திற்கு வகைகூறியது. உணவு, குடிபானங்களும் புகையிலையும், துணி வகைகள், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும், இரசாயனப்பொருட் கள், பெற்ரோலியம், கரி, இறப்பரும் பிளாத்திக்குப் பொருட்களும் ஆகிய கைத் தொழில் வகுப்புக்கள் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் 80 சதவீதங் கொண்ட உயர்வானதொரு பங்கிற்கு வகைகூறுகின்றன.

இவ்வகைகளில் துணை வகுப்பில் குடிபானங்கள், புகையிலை என்பனவற் றின் தயாரிப்பு வெளியீடு கணிசமானளவு வளர்ச்சியடைந்துள்ளமை கவனிக்கக் கூடியதாகும். பாலும் பால் உற்பத்திகளும், மாவரைத்தலும் சீனி உற்பத்தி யும் கணிசமான வருவாயினைக் காட்டிநின்ற அதேவேளையில், சிகரெட் உற் பத்தி எல்லையளவால் வீழ்ச்சியடைந்தது. பெற்ரோலிய உற்பத்தியும் ஓர் சிறிய அதிகரிப்பினைப் பதிவுசெய்துள்ளது.

உடை ஏற்றுமதிகள் ஓர் பெருமளவான அதிகரிப்பினைக் காட்டிய வேளையில், புடவை உற்பத்தியின் பெறுமதியில் ஓர் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. எடுத்துக்காட்டாக தேசிய புடவைக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எல்லா உற்பத்திக் கூறுகளினதும் புடவை வெளியீடு 15 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றது. இதன்விளைவாக புடவை இறக்குமதிகளின் பெறு மதி 100 சதவீதத்திற்கு மேலானதோர் அதிகரிப்பினைக் கொண்டிருந்தது.

அத்துடன் தாளும் தாள் உற்பத்திகளும்கொண்ட கைத்தொழில் தொகுதி யில் பெரும் வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்டுள்ளது. உற்பத்தியில் ஏற்பட்ட இவ் வீழ்ச்சிக்கு இவ்வாண்டின் ஒரு பகுதியில் வரட்சி நிலைமை காணப்பட்டமை யினுல் பதனிடலிற்கு போதிய நீர் கிடைக்கப்பெருமையும், உற்பத்திகள் தயா ரிப்பிற்கு இறக்குமதி செய்யப்பட்ட தாளும் தாள் அட்டையும் குறைந்தளவு கிடைக்கக்கூடியதாக இருந்தமையும் ஓரளவு காரணங்களாகும்.

1976இல் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதோர் போக்கு யாதெனில் யூரியா வளமாக்கிப் பொறியினை நிறுவுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டமையாகும். இதன் மொத்த மூலதனச்செலவு ரூ. 12,000 இலட்ச மென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதன் இயலளவு 310,000 தொன் களாகும்.

## விலைகளும் கூலிகளும்

### விலைகள்

நாட்டின் பொதுநுகர்வோர் விலைமட்டத்தினை எடுத்துக்காட்டும் ஒரே குறி காட்டியான கொழும்பு நுகர்வோர் விலைக்குறிகாட்டி, 1974இன் 12.3 சதவீதத் திற்கும், 1975இன் 6.7 சதவீத அதிகரிப்புக்களுக்கெதிராக 1976இல் 1.2 சத வீதத்தால் அதிகரித்தது. உள்ளடக்க விலைக்குறிகாட்டியின்படி[1] நடப்பாண் டில் விலை அதிகரிப்பு 6.6 சதவீதமாக இருந்தது.

---

1. நிலையான (1959) விலைகளில் மொத்த தேசிய உற்பத்திக்கு, நடைமுறை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தியின் விகிதம் என்பதே உள்ளடக்கவிலைக்குறிகாட்டியாகும்.